கிராமின் கிருஷி மவுசம் சேவா

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 29-09-2023**

**விருதுநகர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-09-29 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-09-30 | 2023-10-01 | 2023-10-02 | 2023-10-03 | 2023-10-04 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 5.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 36.0 | 36.0 | 35.0 | 35.0 | 35.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 26.0 | 26.0 | 25.0 | 25.0 | 24.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 80 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 50 | 50 | 50 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 16 | 16 | 14 | 14 | 12 |
| காற்றின் திசை (கோணம்) | 230 | 230 | 230 | 230 | 230 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 8 | 7 | 8 | 7 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் நாட்களில் மிதமான முதல் மிக அதிகமான மேகமூட்டத்துடன் காணப்படும். 04.10.2023 அன்று லேசான மழை என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35.0°C முதல் 36.0°C ஆகவும், குறைந்தபட்ச 24.0°C முதல் 26.0°C காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 முதல் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 முதல் 50 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. அடுத்த 24 மணி நேரகாற்றின் வேகம் மணிக்கு 12.0 முதல் 16.0 கி.மீ வரை இருக்கும் என்றும் காற்றின் திசை தென்மேற்கு திசையில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பொது ஆலோசனை:

| |
|---|
| லேசான மழை பெய்யும் என கணிக்கப்பட்டுள்ளது. வடகிழக்கு பருவமழை காலத்தில் பயிர்களை பயிரிடுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட, நோயற்ற மற்றும் தரமான விதைகளை வாங்கவும். புரட்டாசி பட்டத்துக்கு ஏற்ற பயிர் இரகங்கள்: உளுந்து- வம்பன் 11; பாசிப்பயிறு- வம்பன் 4; மக்காச்சோளம்- COH6; பருத்தி- SVPR 6, SVPR4, KC3 மற்றும் கோ 17; குதிரைவாலி- MDU1; சோளம்-K12 போன்ற பயிர் இரகங்களை பயிரிடலாம். |

## குறுஞ்செய்தி :

| |
|---|
| லேசான முதல் லேசான மழை. காற்றின் வேகம் அதிகமாக இருக்கும் என்று கணிக்கப்படுவதால், எளிதில் உடையக்கூடிய பயிர்களுக்கு பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தபடுகிறது. |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மக்காச்சோளம் | மக்காசோளம் பயிரிடும் விவசாயிகளின் கவனத்திற்கு மக்காச்சோள பயிரில் படைப்புழுவின் தாக்குதலை கட்டுப்படுத்த குளோர்ஆன்ரனிலிபுரோல் 18.5% SC@ 0.4 மி / லிட்டர் தண்ணீர் (அல்லது ) ஃபுளூபென்டமைடு 480 SC @0.4 மி / லிட்டர் தண்ணீர் ஆகிய மருந்துகளில் ஏதேனும் ஒன்றை கை தெளிப்பான் கொண்டு குருத்துப் பகுதியில் நன்கு படும்படி தெளிக்க வேண்டும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| செம்மறி ஆடு | துள்ளுமாரி நோய்: நுண்ணுயிரினால் ஏற்படக்கூடிய இந்நோய் அனைத்து வயதுடைய செம்மறி மற்றும் வெள்ளாடுகளை தாக்கி அதிக உயிரிழப்பை ஏற்படுத்துகிறது. இந்நோய் மழைக்காலத்திற்கு பின்னர் அதிக அளவில் ஏற்படும். அறிகுறிகள்: இளம் குட்டிகளில் திடீர் உயிரிழப்பு ஏற்படும். சில ஆடுகளில், தீவிர வலியுடன் கூடிய வயிற்றுப்போக்கு, மூச்சு விடுவதில் சிரமம், வலிப்பு போன்ற அறிகுறிகள் தென்படும். தடுப்புமுறைகள்: இளம் குட்டிகளுக்கு முதல் தடுப்பூசி 6 வார வயதிலும் பின்னர் வருடம் ஒரு முறை மழைக்காலத்திற்கு முன்னரும் போட வேண்டும். மழைக்காலத்திற்கு பின்னர் |

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | தழைக்கும் இளம் புற்கள் கொண்ட மேய்ச்சல் நிலங்களில் ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுமதிக்கக்கூடாது. தீவனங்களில் திடீர் மாற்றம் செய்வதை தவிர்க்க வேண்டும். |

**பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:**

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிப்பு: ஒரு வண்டி தொழுஉரத்துடன் தலா 5 கிலோ சூப்பர் பாஸ்பேட், பொட்டாசியம் மற்றும் யூரியாவுடன் ஒரு சாக்குப்பை அளவு தோட்ட மண்ணுடன் ஒரு கைப்பிடி அளவு சுண்ணாம்பு எல்லாம் சேர்த்து நிழலில் உலர்த்த வேண்டும். நிழலில் குவித்து வைக்க வேண்டும். 15 நாட்களில் ஊட்டமேற்றிய தொழுஉரம் தயாராகிவிடும்.இதனை மண்ணில் இட்டு பயன்படுத்தலாம். நன்மைகள்: ஊட்டமேற்றிய தொழு உரம் மண்ணின் பௌதிக் பண்புகளை மேம்படுத்துகிறது.பயிர் வளர்சிக்குத் தேவையான அனைத்து ஊட்டச்சத்துக்களையும் அளிக்கின்றது. |
| பொது ஆலோசனை | இலைவழித் தெளிப்பு: யூரியா, டி.எ.பி மற்றும் [பொட்டாஷ்1% யூரியாவை (10கி /லிட்டர் தண்ணீரில்) கரைசலை விதைத்த 30 மற்றும் 45 நாட்களில் இலைவழியாக தெளிக்க வேண்டும். 2%டி.எ.பி (20கிராம் /லிட்டர் தண்ணீர்) கரைசலை பூக்கும் தருணத்தில் தெளிக்கவேண்டும். இதனால் பூக்கள் நன்கு பிடித்து காய்ப்பு நன்றாக இருக்கும்.2% பொட்டாஷ்(20கி/லிட்டர்தண்ணீர்) விதைத்த 30 நாட்களில் தெளிக்கவேண்டும். இதன் மூலம் பயறு வகைப் பயிரில் நல்ல விளைச்சலும் தரமான மகசூல் பெறலாம். |
| பொது ஆலோசனை | பயறு வகை பயிர்களின் விதைநேர்த்தி செய்யும் தொழில்நுட்பங்கள்: 1.ஒரு ஏக்கர் விதைப்பிற்குத் தேவையான விதைகளுடன் தமிழ்நாடு வேளான்மைப் பல்கலைக்கழகம் விதை நேர்த்தி செய்யும் விதை அமிர்தம் (80மிலி ) திரவத்தை கலந்து அனைத்து விதைகளிலும் உளுந்து மற்றும் பாசி போன்ற பயறுவகைகளில் நன்கு பரவும்படி விதைப்பூச்சி செய்யவேண்டும்.2. விதைப்பூச்சு செய்த விதைகளை நன்கு உலர வைத்து பின்பு விதைப்பிற்கு பயன்படுத்த வேண்டும். பயன்கள்: 1. முளைக்குருத்து வெளிவருவதை துரிதப்படுத்துகிறது.2. விதைகளின் முளைப்புத்திறனை 8-10 சதவீதம் |

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | அதிகப்படுத்துகிறது. 3.பக்க வேர்களின் முளைப்புத்திறனை அதிகரித்து, வறட்சியைத் தாங்கும் திறனை மேம்படுத்துகிறது. |
| பொது ஆலோசனை | நாற்றழுகல் நோய்: தக்காளி, மிளகாய் மற்றும் கத்தரிக்காய் போன்ற காய்கறி பயிர்களின் இளம்பயிரை நாற்றழுகல் நோய் தாக்குகிறது. அறிகுறிகள்: இந்நோய் தாக்கப்பட்ட செடியின் தண்டுப் பகுதிகள் அளவில் சுருங்கி, செடிகள் தலைகீழாக கவிழ்ந்த நிலையில் இருக்கும். நோய் மேலாண்மை: 1. நாற்றங்காலில் தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். 2. மேட்டுப்பாத்தி நாற்றங்கால் அமைக்க வேண்டும்.3.நாற்றங்கால் பகுதியில் விதைப்பதற்கு முன்பு, கடைசி உழவுக்கு பின் டிரைக்கோடெர்மா விரிடி யை நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து (2.5 கிலோ +50 கிலோ தொழு உரம்) தூவி பின் விதைப்பு எடுக்கவேண்டும். 4. பாதிக்கப்பட்ட செடிகளின் தூர்பாகம் நன்கு நனையும்படி மெட்டாலக்ஸீல் என்ற மருந்தினை (0.1%) ஊற்றலாம். |
| பொது ஆலோசனை | மழைக்காலத்தில், தட்டைப்புழு தாக்குதலில் இருந்து ஆடு மற்றும் மாடுகளை பாதுகாக்க குளத்தில் இருந்து விலக்கி வைக்க வேண்டும். |
| பொது ஆலோசனை | மானாவாரி நேரடி நெல் விதைப்பில் இயந்திர விதைப்பு நுட்பத்தைப் பயன்படுத்துவது உகந்த ஆழம் மற்றும் இடைவெளியைப் பராமரிக்கவும், வறட்சியால் ஏற்படும் பயிர் இழப்பைக் குறைக்கவும் உதவுகிறது. |
| பொது ஆலோசனை | மழை மற்றும் அதிக காற்றுடன் அதிக ஈரப்பதம் இருப்பது மஞ்சள் கரிப்பூட்டை நோய் உகந்தது. காப்பர் ஆக்ஸிகுளோரைடு 2.5 கிராம்/லிட்டர் அல்லது புரோபிகோனசோல் 1.0 மிலி/லிட்டர் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். |